# *புனித இல்தெகார்*

இவள் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் புகழ் பெற்ற பெண்களில் ஒருத்தி. கவிகள் எழுதுவாள். வருங்காரியங்களை முன் அறிவித்தாள். வைத்தியம் தெரியும். அரசியல்வாதி; பாப்புமார், அரசர்கள், ஆயர்கள், இல்லற விசுவாசிகள் ஆகியவர்களை அச்சமின்றி கண்டிப்பாள். இல்தெகார் சீர்திருத்தவே வாழ்ந்தாள் என்று சொல்லலாம். ஆனால் பிறரைச் சீர்திருத்தத் தொடங்குமுன் அவள் தன்னைச் சீர்திருத்தினாள். பின்னர் அவள் போதித்ததை வாழ்ந்து காட்டினாள்.

நல்ல புத்தகங்கள் பல அவள் தேர்ந்தெடுத்துப் படித்தாள். நெய்தல், தையல், சமையல், ரொட்டி சுடுதல் முதலிய வேலைகள் தெரியும். வீட்டுக்காரியங்களை நன்கு கவனிப்பாள். வாழ்நாள் முழுவதுமே நோயாக இருந்தாலும் தன் வேதனையைப் பற்றி யாரிடமும் சொல்வதில்லை. ஆறு பேர் செய்யும் வேலையை அவள் தனியே செய்வாள். தன் உடலை கசையால் அடித்து தன்னை அவள் ஆண்டு வந்ததால் இவள் பிறரையும் ஆளக்கூடியவளானாள். கன்னியர், நாட்டின் தலைவர்கள், திருச்சபையின் அதிகாரிகள் ஆகியவர்களை நல்வழியில் நடத்தினாள். அவள் குற்றமற்ற வாழ்வு நடத்தினதினாலேயே திருச்சபைக்கும் உலகுக்கும் ஏராளமான நன்மை செய்யக் கூடியவளானாள்.

**சிந்தனை:**

தன்னை அறிவது மிகக் கடின வேலை. அது மிக மிக பயனுள்ளது. நீடிக்கும் திருப்தியளிக்கும்.

**செபம்:**

ஆண்டவரே, உம்மை நான் அறியும் வரம் தாரும். (புனித அகுஸ்தின்)